இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

பணிப்பாளர் நாயகத்தின்

# செயலாற்றுகை அறிக்கை

2012

# நோக்கக்கூற்று

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கி இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலை செயற்படுத்தல்

# பணிக்கூற்று

இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலின் தரச்சிறப்பு, போதியளவு மேம்பாடு ஆகியனவற்றை நோக்கி சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்தல், இறப்பர் பயிர்ச்செய்கைக்கான நிதி உதவி, விவசாய உள்ளீடுகள், பரந்த சேவை அத்துடன் இறப்பர் கைத்தொழிலின் அபிவிருத்தி.

# இலக்கு

இறப்பர் பயிர்ச்செய்கை நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

இறப்பர் பயிர்ச்செய்கை நில அளவை அதிகரித்தல்.

# முன்னுரை

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இறப்பர் காணி தொகைமதிப்பீட்டில் கிடைத்த தகவலின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இறப்பர் காணி பயிர்ச்செய்கையின் நில அளவு 130780 ஹெக்டெயர் ஆகும். அந் நிலப்பரப்பில் 82170 ஹெக்டெயர் சிறு இறப்பர் தோட்ட பிரிவுக்கும், 48610 ஹெக்டெயர் அரச பிரிவுக்கும் சொந்தமானது. வருடாந்த மொத்த இறப்பர் உற்பத்தி 152049 மெற்றிக்தொன் ஆவதோடு இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 3.90% குறைவினைக் காட்டுகின்றது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 39% சீட் இறப்பர் ஆவதோடு, 29% இறப்பர் பால் உற்பத்தி , 26% கிரேப் இறப்பர் உற்பத்திக்கும் 6% புளோக் இறப்பர் உற்பத்திக்கும் ஒதுக்கப்பட்டது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 25% ஏற்றுமதி செய்துள்ளதோடு எஞ்சிய 72% உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊடாக நுகர்வு செய்யப்பட்டிருந்தது. (பச்சை இறப்பர்)உடன் இறப்பர் ஏற்றமதியின் மொத்தப் பெறுமதி 15726.00 மில்லியன் ரூபாய் ஆகும். மலேசியா, பாக்கிஸ்தான் மற்றும் இந்தியா, ஜேர்மனி, அமரிக்கா ஆகியன இலங்கையின் பச்சை இறப்பரை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகளாவதோடு அந்நாடுகள் கொள்வனவு செய்த இறப்பரின் அளவு மொத்த ஏற்றமதி அளவில் 71% ஆகும். 2012 ஆம் ஆண்டில் சீட் இறப்பர் கிலோவொன்றின் சராசரி விலை 416.61 ரூபாயாவதோடு அது முன்னைய வருடத்தை விட 19% விலை வீழ்ச்சியாகும்.

அரசின் தலையீட்டின் பிரகாரம் இறப்பர் கைத்தொழிலின் வளர்ச்சியை நோக்கி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகள் இறப்பர் உற்பத்தியின் முன்னேற்றத்திற்கு அநேகமாக உதவியாக அமைந்துள்ளன. 2012 ஆம் ஆண்டுக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 1051.83 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு 632.00 மில்லியன் ரூபாய் செலவை ஏற்றுள்ளதோடு 60% சதவீதம் ஆகின்றது. அரச நாற்றுமேடைகளில் ஆண்டின் கன்று உற்பத்தி 2 மில்லியன் ஆனதோடு விநியோக அளவு 1.36 மில்லியன் கன்றுகளாகும்.

இதன்படி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகையை அதிகரிப்பதனுள் 2012 ஆம் ஆண்டு இறப்பர் பிரிவின் வருடாந்த இலக்கினை அடைந்த சிறப்பான வருடமாகும். இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு அதிகபட்சமாக முதலீடு செய்தல், மனித, பௌதிக வளங்களை அபிவிருத்திச் செய்தல், அதிக பங்களிப்பு, ஈடுபாடு மற்றும் தொழில் திருப்தி போன்ற காரணங்களினுள் இவ்வருடத்தில் துரித வளர்ச்சியை பெற்றுள்ளது.

பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிரை விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொணராகலை, அம்பாந்தோட்டை, அவ்வாறே அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களுக்கும், அமைதியான சூழ்நிலையினுள் வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பு செய்து வவுனியா மாவட்டத்தில் வவுனியா, நெடுங்கேணி பிரதேசங்களுக்கும், முல்லைதீவு மாவட்டத்தில் ஒட்டுச்சுட்டான் பிரதேசத்தில் புதிய இறப்பர் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு 2011 ம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2012 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்தியின் பொருட்டு அம்பாறை, மொனராகலை, பதுளை, அம்பாந்தோட்டை, வவுனியா மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் கன்று வெற்றிடங்களை நிரப்புவதற்காக 93177 கன்றுகள் விநியோகிக்கப்பட்டதோடு ஊடுபயிர் செய்கைக்காக 74406 வாழை மற்றும் அன்னாசிக் கன்றுகள் வழங்கப்பட்டன.
இதற்காக பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

ஆர் பீ. பிரேமதாச,
பணிப்பாளர் நாயகம்,
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 1.1 | வரலாற்றுப் பின்னணி | 1 |
| 1.2 | இத்திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள். | 2 |
| 1.2.1 | 1953 ஆம் ஆண்டின் 36 ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் மானியச் சட்டம | 2 |
| 1.2.2:, | 1956 11 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம் | 2 |
| 1.2.3 | 2006, 20ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிர்செய்கை மானியச் (திருத்தப்பட்டது) சட்டத்தில் விதிக்கப்படும் ஸெஸ் வரிக்கட்டளை | 3 |
| 1.3 | திணைக்களத்தினது நிறுவன எண்ணிக்கை | 3-3 |
| 1.3.1 | தலைமைக் காரியாலயத்தின் முக்கிய செயற்பாடுகளும் பொறுப்புகளும் | 4-5 |
| 1.3.2 | பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் முக்கிய சேவைகள | 5-6 |
| 1.3.3 | அரச நாற்றுமேடைகளின் பிரதான செயற்பாடுகள் | 6 |
| 2 | 2012ம் ஆண்டின் செயலாற்றுகை முன்னேற்றம் | 7 |
| 2.1 | இறப்பர் பயிர் மானிய நிகழ்ச்சித்திட்டம் | 7 |
| 2.2 | மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 7 |
| 2.3 | ஊடுபயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 8 |
| 2.4 | பயிற்சி நிகழ்ச்சித் திடடம் | 8 |
| 2.5 | திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 8 |
| 3 | இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - வருடம் 2012 | 9 |
| 3.1 | இறப்பர் பயிர்செய்கை பரப்பின் அளவு | 9 |
| 3.2 | உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவு | 9 |
| 3.2.1 | உற்பத்தி | 9 |
| 3.2.2 | உற்பத்திச் செலவு | 10 |
| 3.3 | உள்நாட்டு இறப்பர் நுகர்வு | 10 |
| 3.4 | ஏற்றுமதி | 11-12 |
| 3.5 | இறப்பரின் விலை | 13 |
| 3.6 | இறப்பர் துறை தொழிலாளர் சம்பளம் | 13 |
| 3.7 | இறப்பர் பெருந்தோட்ட பொருள் ஏற்றுமதி | 13 |
| 3.8 | இறப்பர் வியாபாரிகள் | 13 |
| 3.9 | இறப்பர் மீள் பயிரிடல் / புதிய பயிர் செய்கை மானிய முறைமை | 14 |
| 3.10 | மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய பயிர்செய்கை உள்ளடங்கலாக இறப்பர் பயிர் செய்கையின் முன்னேற்றம். | 14-17 |
| 3.11 | வெளிநாட்டு நன்கொடை (IFAD) மூலம் நடைமுறைப் படுத்தப்படும் மொனராகலை விசேட நிகழ்ச்சித்திட்டம் | 18 |

| | | |
|---|---|---|
| 3.12 | இறப்பர் கன்று நாற்றுமேடையும் கன்று விநியோகமும் | 19 |
| 3.12.1 | தனியார் மற்றும் வர்த்தக நாற்றுமேடைக்கான அனுமதிப் பத்திரம் - 2012 | 19-20 |
| 3.13 | ஊடுபயிர் வளர்ப்பு | 20 |
| 3.14 | மழைக்கவச பாவனையை பிரபல்யப்படுத்தல். | 21 |
| 3.15 | தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நிலங்கள் துண்டாடப்படுதலை கட்டுப்படுத்தும் சபையின் நடவடிக்கை | 21 |
| 3.16 | சர்வதேச அமைப்புக்களிலான அங்கத்துவம். | 21-22 |
| 3.17 | பிரதான சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரும் நடவடிக்கை | 22-23 |
| 3.18 | மானியம் வழங்குதல் | 23 |
| 3.19 | விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 24 |
| 3.19.1 | அம்பாறை மாவட்டத்தில் இறப்பர் பயிர்செய்கையை பரப்புதல். | 24 |
| 3.19.2 | திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2012 | 24-25 |
| 3.20 | இணைந்த நிதியம் | 25 |
| 3.21 | பிரசார நிகழ்ச்சித்திட்டம | 26-27 |
| 3.22 | செஸ் வரி தொடர்பான நடவடிக்கை | 27-28 |
| 3.23 | தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனி செயற்பாடு | 28 |
| 3.24 | நிர்வாகச் செயற்பாடு | 29-31 |
| 3.25 | மீள் பயிரிடலுக்கான ஆலோசனை சபை | 31 |
| 3.26 | கணக்காய்வு நடவடிக்கை | 31 |
| 4. | திணைக்கள அலுவலர் குழாத்தினரின் தகவல்கள் | 32 |
| 5. | ஏனைய நிறுவனங்களில் சேவைகளை மேற்கொள்ளுதல் | 33 |
| 6. | பொதுவிடயங்கள் | 34 |
| 6.1 | புது வருடத்தில் அலுவல்களை ஆரம்பித்தல் | 34 |
| 6.2 | உற்சவங்கள் | 34 |

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் தொடர்பான கணக்காய்வு அறிக்கை-2012
இறப்பர் மீள்பயிரிடல் மானிய நிதியம் தொடர்பான கணக்காய்வு அறிக்கை - 2012

# நன்றி

2012 ஆம் ஆண்டு இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகை மிகவும் சிறப்பான வருடமாகும். பல வருடங்கள் தொடர்ச்சியாக உற்பத்தித்திறனில் ஏற்பட்ட வளர்ச்சி, அதிகமான இறப்பர் கன்றுகளை உற்பத்தி செய்தல், அதிக அதிக நில அளவில் இறப்பர் பயிர்ச்செய்கை, ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு நிதி அதிகளவிலான முதலீடு செய்தலில் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்தல், மனிதவள மேம்பாடு, பௌதிக வள அபிவிருத்தி, அதிக பங்களிப்பு மற்றும் ஈடுபாடு, தொழிலாளர் திருப்தி ஆகிய விடயங்களில் தற்கால வரலாற்றில் உயர்மட்டத்தை அடைந்துள்ளோம். இதற்காக பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

ஆர் பீ. பிரேமதாச,
பணிப்பாளர் நாயகம்,
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# 1. அறிமுகம்

மிக நீண்ட காலந்தொடக்கம் இலங்கைக்கு அந்நிய செலாவனியைப் பெற்று தரும் பிரதான பொருளாதார பெருந்தோட்டப் பயிரான இறப்பர் பயிர், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு சக்தி மிக்க பங்களிப்பினை பெற்றுக் கொடுத்துள்ளது. முக்கியமாக இலங்கையின் பதினான்கு நிர்வாக மாவட்டங்களில் இறப்பர் பயிர்செய்கை பரம்பலடைந்துள்ளதோடு, தற்போது முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, பொலனறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் இறப்பர் பயிர்செய்கை அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டுள்ளது.

## 1.1 வரலாற்றுப் பின்னனி

01. பிரித்தானிய காலானித்துவ ஆட்சி காலத்தில் அதாவது 1876 ம் ஆண்டு ''ஹென்றி விக்ஹெம்'' என்ற ஆங்கிலேயரால் முதன் முதலாக கம்பஹா ஹெனரத்கொட தாவரவியல் பூங்காவில் இறப்பர் கன்று நடப்பட்டதன் மூலம் இலங்கைக்கு இறப்பர் மரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு 07 வருடங்களின் பின் ஆரம்பிக்கப்பட்ட இறப்பர் பயிர் செய்கை தெற்காசியா முழுவதும் பரவலடைந்து இறப்பர் உற்பத்தியானது விரைவாக முன்நோக்கிச் சென்றது. அதற்கு முரனான வகையில் இறப்பர் விலை கீழ்நோக்கிச் சென்றதனால் விலையில் ஸ்தீரத்தன்மையை உருவாக்கும் நோக்கத்துடன் 1922ம் ஆண்டில் பிரித்தானியாவால் '' ஸ்டீவன்ஸன் நடவடிக்கை முறை'' அறிமுகம் செய்யப்பட்டது. பங்கு முறைமையிலான உற்பத்தி மற்றும் பயிர்நிலப் பகுதியை வரையறை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அந்த நடவடிக்கை முறைமைக்கு இறப்பர் செய்கையாளரினாலேயே ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக அது 1928ம் ஆண்டில் கைவிடப்பட்டது. அதேவேளை மீண்டும் இறப்பர் வழங்கல் அதிகரித்து விலை குறைவடைந்ததன் பின்னர் 1934ல் இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புடைய சகல நாடுகளினதும் இணக்கத்துடன் "International Rubber Regulation Agreement" என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஸ்டீவன்ஸன் நடைவடிக்கைக்கு சமமான வரையறைகளை உள்ளடக்கிய அவ்வொப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, இறப்பர் பயிரிடும் நாடுகளில் இறப்பர் நிர்வாகத்தின் பொருட்டு அரச நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அதற்கிணங்க ''1934 ஆம் ஆண்டு 06ம் இலக்க கட்டளைச் சட்டம்'' மூலம் இறப்பர் நிர்வாகத் திணைக்களம் அமைக்கப்பட்டது. அத்திணைக்களத்தில் முதல் இறப்பர் நிர்வாகி திரு. பி. சரவனமுத்து ஆவார். 1944ம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப திணைக்களத்தின் பெயர் ''இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்'' என திருத்தம் செய்யப்பட்டது.

1953ம் ஆண்டு இறப்பரினை மீண்டும் பயிரிடுவதற்காக '' 1953ம் ஆண்டு 36 ம் இலக்கம் கொண்ட மீண்டும் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டம்'' நடைமுறைபப்டுத்தப்பட்டது. இறப்பரினை மீண்டும் பயிரிடுவதற்கு வழிவகுக்கும் வகையில் ''1934 ஆம் ஆண்டு 06 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டு கட்டளைச் சட்டம்'' மீள் திருத்தம் செய்யப்பட்டு '' 1956 ஆம் ஆண்டு 11ம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்' அனுமதித்துக் கொள்ளப்பட்டதோடு, அச்சட்டம் மற்றும் '' 1953ஆம் ஆண்டு இலக்க 36ம் இலக்கம் கொண்ட மீண்டும் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டத்தின் கட்டளைக்கு ஏற்ப இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகள் வழி நடாத்தப்படுகின்றன.

மேலும் இத்திணைக்களத்திற்கு, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமும், சிறுதோட்ட உரிமையாளருக்கு விற்பனை மற்றும் விஸ்த்தீரன சேவையை பெற்றுக்கொடுப்பதன் மூலம், துருசவிய நிதியமும் பங்களிப்பினை பெற்றுக் கொடுக்கும் இரு நிறுவனங்களாக காணப்படுகின்றன.

## 1.2 இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள்.

### 1.2.1 1953 ஆம் ஆண்டின் 36 ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் மானியச் சட்டம்:,

இச்சட்டத்தின் கீழ் கீழ்க்குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இறப்பரினை மீண்டும் பயிர் செய்தல், இறப்பரினை புதிதாக பயிரிடல், ஊடுபயிர் செய்கை, தொழிற்சாலைகளை புதுப்பித்தல் மற்றும் முறைமையான கட்டுப்பாடு.
- இச்சட்டத்தின் 7 வது பிரிவின் கீழ் ஸெஸ் வரி விதிக்கப்பட்டுள்ளது.

### 1.2.2 1956 ஆம் ஆண்டின் 11 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்:,

இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்நாட்டிலுள்ள சகல சிறு இறப்பர் நிலையங்கள் மற்றும் இறப்பர் தோட்டங்களின் பயிர் செய்கை, உரிமையாளர்கள், காணியின் பரப்பு ஆகியவை உள்ளடங்கிய அடடவணையொன்றினை நடைமுறைப்படுத்திச் செல்வது இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் யாப்புரீதியான செயற்பாடாகும். இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்செய்கை இடம்பெறுகின்ற 10 ஏக்கருக்கும் அதிகமான (ஹெக்டயார் 4.04 ற்கும் அதிகமான) இறப்பர் பயிர் செய்கை ‘‘தோட்டம்’’ ஆகவும், 10 ஏக்கருக்கு குறைந்த (ஹெக்டயார் 4.04 ற்கும் குறைந்தது) இறப்பர் பயிர் செய்கை ‘‘சிறு காணியாகவும்’’ பொருள் கொள்ளப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ் கீழ்க்குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல இறப்பர் தோட்டங்கள் மற்றும் சிறு காணிகளை பதிவு செய்தல்.

பதிவு செய்தலை தேவையான சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்தல்.

இறப்பரினை புதிதாக பயிரிடுவதற்கும் மீள் பயிரிடுவதற்கும் அனுமதி பத்திரங்களை விநியோகித்தல்.

இறப்பர் வியாபாரிகளுக்கு அனுமதி பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் இறப்பரினை விலைக்கு வாங்குதல், விற்பனை செய்தல் தொடர்பான தகவல்களை திரட்டுதல்.

உற்பத்தியாளர்களுக்கு அனுமதி பத்திரத்தை விநியோகித்தல்.

இறப்பர் விதைகளையும், கன்றுகளையும் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி பத்திரங்களை வழங்குதல்.

இறப்பர் கட்டுப்பாட்டு சட்டத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, நிறுவப்பட்டுள்ள இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திற்கு தேவையான நிதியினை பெற்றுக் கொள்வதற்காக ஏற்றுமதி சுங்கவரியினை விதித்தல். (36 வது பிரிவு)

பயிரிடப்பட்டுள்ள இறப்பரின் அளவு, உற்பத்தி, நுகர்வு மற்றும் ஏற்றுமதி தொடர்பான புள்ளிவிபரங்களை சேகரித்தல்.

சர்வதேச இறப்பர் கல்விக் குழுவில் அங்கத்துவம் வகித்தல்.

### 1.2.3 2006 ஆம் ஆண்டின் 20ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிர்செய்கை மானியச் (திருத்தப்பட்டது) சட்டத்தில் விதிக்கப்படும் ஸெஸ் வரிக்கட்டளை

1953ஆம் ஆண்டின் 36ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடும் நிதிசட்டத்தின் 7 வது பிரிவிற்கு இணங்க, ஏற்றுமதி வரியினை அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட சகல இறப்பர்களுக்கும் இறாத்தலொன்றுக்கு 10 சதம் ஏற்றுமதி விரியாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டின் 20ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடும் மானியச் (திருத்தப்பட்டது) சட்டத்திற்கு ஏற்ப தேசிய நுகர்வுக்கு எடுக்கப்படும்

- பச்சையான இயற்கை இறப்பருக்கும்

- செயற்கை இறப்பருக்கும்

ஸெஸ் வரி அறவிடுவதற்கு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்கம் கொண்ட ஸெஸ் வரிக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இயற்கையான பச்சை இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திக்கே ஸெஸ் வரி அறவிடப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்கம் கொண்ட இயற்கை இறப்பருக்கான ஸெஸ் வரிக் கட்டளை உள்ளடங்கிய 2007 ஆகஸ்ட் 30ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1512/08 உடைய அதிவிசேட வர்த்தமாணி பத்திரிகைக்கு இணங்க ஏற்றுமதிக்காக அல்லது தேசிய நுகர்விற்காக உற்பத்தி செய்யப்படும், இயற்கை இறப்பர் சார்ந்த உற்பத்திக்கு தேவையான பச்சை இறப்பர் கிலோகிராம் ஒன்றிற்கு 4/- ரூபா ஸெஸ் வரி அறவிடுவதற்கு தேவையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு, மேற்கூறிய ஸெஸ் வரியினை அறவிட்டுக் கொள்வதற்கான நேரடி அதிகாரம் காணப்படுகின்றது.

அதற்கிணங்க

- மேற்படி ஸெஸ் வரியினை நேரடியாக அறவிட்டுக் கொள்ளுதல்

- கைத்தொழிலாளர்கள், உற்பத்தியாளர்களை ஸெஸ் வரிக்காக பதிவு செய்து கொள்ளல்.

- வரி செலுத்த தவறுபவர் மற்றும் பதிவுசெய்து கொள்ளாதவருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான படிமுறைகளை மேற்கொள்ளுதல்.

என்பன இதன் மூலம் இடம்பெறும்.

## 1.3 திணைக்களத்தினது நிறுவன எண்ணிக்கை

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனமான இத்திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம், இலக்கம் 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு-02 எனும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. தலைமைக் காரியாலயத்தினால் நிர்வாகம், ஒருங்கிணைப்பு, ஸெஸ் வரியினை ஒன்று சேர்த்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மானியங்களை செலுத்துதல், கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகித்தல், உரத்தினை விநியோகித்தல் மற்றும் ஆலோசனை சேவைகள் முதலான இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்திக்காக மேற்கொளள்ப்படும் சேவைகள் மக்களுக்கு மிகவும் வினைத்திறனான முறையில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பகிரப்பட்டுள்ளன. அதற்கிணங்க 05 பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் பகிரப்பட்டுள்ளதோடு, அதற்கேற்ப 05 பிரதேச அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. கேகாலை பிரதேச பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்
   (கேகாலை, குருநாகலை,கண்டி,மாத்தளை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்காக )

2. களுத்துறை பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (களுத்துறை மாவட்டத்திற்காக)

3. இரத்தினபுரி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்களுக்காக)

4. காலி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்காக)

5. மொனராகலை பிரதேச உதவிப் பணிப்பாளர் காரியாலயம்
   (மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்காக)

மேலும் இறப்பர் பயிர் செய்கையின் பொருட்டு சிறந்த ஒட்டுமுறையிலான கன்று உற்பத்திக்காக அரசினால் 07 கன்று நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவையாவன;

1. மீரிகம (கம்பஹா மாவட்டம்)
2. வெளிக்கடைமுள்ள (கம்பஹா மாவட்டம்)
3. ஏகல் ஓய (களுத்துறை மாவட்டம்)
4. குருகொடை (களுத்துறை மாவட்டம்)
5. கரப்பிஞ்சா (இரத்தினபுரி மாவட்டம்)
6. கும்புக்கன (மொனராகலை மாவட்டம்)
7. மித்தெனிய ( அம்பாந்தோட்டை மாவட்டம்)

### 1.3.1 தலைமைக் காரியாலயத்தின் முக்கிய செயற்பாடுகளும் பொறுப்புகளும்.

- பிரதான சட்டம் மற்றும் சட்ட மூலத்தினூடாக பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல்.

- பிரதேச அலுவலகங்களினூடாக இறப்பர்க் காணி மற்றும் அதன் உரிமையாளர்களை பதிவு செய்தல், அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் பயிர்செய்கைக்கான கன்று, உரம் மற்றும் மாணிய நிதியினை பெற்றுக் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.

- மீள் பயிரிடல் மற்றும் புதிய பயிர் வளர்ப்புக்கான மாணிய முறைமையினை நிர்வகித்தல் மற்றும் மாவட்ட அலுவலகங்களினூடாக மாணியங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.

- பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மீள் பயிரிடல் அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல்.

- அரச நாற்று மேடை மற்றும் தனியார் இறப்பர் நாற்று மேடையின் மூலம் உயர்தர இறப்பர் கன்றுகளை உற்பத்தி செய்தல் மற்றும் கன்று உற்பத்திக்காக தனியார் துறைக்கு நன்கொடை மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

- இறப்பர் வியாபாரம், இறப்பர் சார்ந்த உற்பத்தி மற்றும் இறப்பர் ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

- இறப்பர் உற்பத்தியை மேற்கொள்வதற்காக தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கு மானிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- இறப்பர் பயிர்செய்கை காணியின் பரப்பு, உற்பத்தி, உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதி முதலான பெறுமதியான புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்களை சேகரித்தல்.

- இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்திக்காக அத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு தேவையான விவசாய மூலப்பொருட்களை போக்குவரத்து செய்து கொடுத்தல்.

- சந்தை தொடர்பாக, சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களை அறிவுறுத்துதல்

- இயற்கை இறப்பர் உற்பத்தி , நுகர்வு மற்றும் வியாபாரம் தொடர்பாக சர்வதேச அமைப்புகளுடன் செயலாற்றுதல்.

- ஸெஸ் நிதியை சேகரித்தல் மற்றும் நிர்வகித்தல்

- இறப்பர் பயிர்செய்கையில் மற்றும் உற்பத்தியில், அவ்வவ் காலத்திற்கு ஏற்ப சிறுதோட்ட உரிமையாளருக்கு தேவையான அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- சிறுதோட்ட உரிமையாளரின் பொருளாதார அபிவிருத்தியை கருத்திற் கொண்டு நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

- இறப்பர் துறையின் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலும் அதற்கான முக்கிய நிறுவனமாக செயற்படுதலும்.

- மகிந்த சிந்தனை, கம நெகும, கிழக்கின் உதயம், நாம் பயிர் வளர்ப்போம், நாட்டை உயர்த்துவோம் முதலான அரசின் விசேட அபிவிருத்தி ஆலோசனைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச அலுவலகங்கள் மற்றும் அமைச்சிற்கு இடையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- இறப்பர் துறைக்குரிய அரச வருமானத்தை மதிப்பிடுதல், சேகரித்தல் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

### 1.3.2 பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் முக்கிய சேவைகளாவன

- இறப்பர் பயிர் செய்கையின் பொருட்டு காணிகளை பதிவு செய்தல்.

- இறப்பரினை மீள் பயிரிடுதல் மற்றும் புதிதாக பயிர்செய்தலுக்கான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்.

- தேயிலை / இறப்பர் ஆகிய இணைப்புப் பயிர் செய்கைக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

- ஊடுபயிர் செயகைக்கான அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல்.
- அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட பயிர்செய்கையாளருக்கு மானியங்களை வழங்குதல்.

- இறப்பர் வியாபார நிலையங்களுக்கான வியாபார அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

- இளமையான மற்றும் முதிர்ச்சியடைந்த இறப்பர் செய்கைக்கு உரங்களை பகிர்ந்தளித்தல்

- இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் சங்கங்களை நடாத்திச் செல்லுதல்.

- அரச இறப்பர்க்கன்று நாற்றுமேடைகளை பராமரித்துச் செல்லுதலும் கன்று உற்பத்தியும்.

- தனியார் இறப்பர்க்கன்று நாற்றுமேடைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

- விவசாயிகள் மற்றும் தோட்ட உரிமையாளருக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்றுக் கொடுத்தல்.

- இறப்பர் கன்றுகளை பகர்ந்தளித்தல்.

- இறப்பர் பயிருக்கு தெற்றும் நோய் தொடர்பாக இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவிப்பதோடு பொருத்தமான படிமுறைகளை மேற்கொள்ளுதல்.

- கமநெகும, மகிந்த சிந்தனை, கிழக்கின் உதயம், நாம் பயிர் வளர்பபோம் நாட்டை உயர்த்துவோம் முதலான அரசின் விசேட அபிவிருத்தி ஆலோசனை செயற்பாடுகளை செயற்படுத்ததல்.
- துருசவிய அறநிதியத்தின் நடவடிக்கைக்காக செயற்பாட்டு உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

### 1.3.3 அரச நாற்றுமேடைகளின் பிரதான செயற்பாடுகளாவன;

1. தேசிய இலக்கை நோக்கி,

   - மீள் பயிர்செய்கை மற்றும் புதிய பயிர் செய்கை கன்றுகளுக்கான தேவையின் பொருட்டு சிறந்த தரத்துடன் உயர் ஒட்டு முறையிலான இறப்பர் கன்றுகளை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபாரிசுக்கு அமைய உற்பத்தி செய்து பகிர்ந்தளித்தல்.

   - இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய மரபனு கண்டுபிடிப்புக்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துதல்.

2. நாற்றுமேடைகளின் ஏனைய நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

# 2. 2012ம் ஆண்டின் செயலாற்றுகை முன்னேற்றம்

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2012ம் வருட செயலாற்றுகை தொடர்பாக கருதும் போது, உயர்ந்த செயலாற்றுகை மூலம் இறப்பர் பிரிவில் வருடாந்த இலக்கை எய்திய விசேட வருடமாக கருத முடியும். இங்கு செயலாற்றுகையினை அதிகரித்துக் கொள்வதற்காக பங்களிப்புச் செய்த, விசேடமாக குறிப்பிடக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களாக.

- இறப்பர் பயிர்செய்கை மானிய நிகழ்ச்சித்திட்டம்
- மழைக்கவச பாவனை நிகழ்ச்சித்திட்டம்
- ஊடுபயிர் நிகழ்ச்சித்திட்டம்
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

முதலான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன

## 2.1 இறப்பர் பயிர் முானியநிகழ்ச்சித்திட்டம்

புதிய இறப்பர் பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3,000 ஹெக்டயார் பரப்பு இலக்காக இருந்ததோடு அவற்றுள் 1,269.633 ஹெக்டயார் பரப்பும், மொனராகலை மாவட்டத்தில் 5,000 ம் ஹெக்டயார் பரப்பும் இறப்பர் பயிர்செய்கை விசேட நிகழ்ச்சித்திட்டம் (IFAD) வெளிநாட்டு நன்கொடை கருத்திட்டம் இவ்வருடத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டதோடு அதனூடாக 1,027 ஹெக்டயாரும், பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் 179 ஹெக்டயாரும் பயிரிடப்பட்டன. இதற்கிணங்க, புதிய பயிர்செய்கையின் கீழ் பயிரிடப்பட்ட மொத்தக் காணியின் பரப்பு 2,475.633 ஹெக்டயார் ஆகும். புதிய இறப்பர் பயிர்செய்கையின் பொருட்டு மானியமாக 144.23 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளன.

புதிய இறப்பர் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களின் பொருட்டு 1,800 ஹெக்டயார் இலக்காக இருந்ததோடு 1,117.139 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் 1,500 ஹெக்டயார் பரப்பு இலக்காக இருந்ததோடு 1,044 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. அதற்கிணங்க இறப்பர் மீள் பயிர் செய்கையின் கீழ் பயிரிடப்பட்ட மொத்தக் காணியின் பரப்பு 2,161.139 ஹெக்டயராகும். இறப்பர் மீள்பயிர் செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு மானியமாக 204.44 மில்லியன் ரூபா செலவிடபப்ட்டுள்ளன.

## 2.2 மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களிற்காக 3,400 ஹெக்டயார் பரப்பு இலக்காகக் காணப்பட்டதோடு அவற்றுள் 726.075 ஹெக்டயாரிற்கு மழைக்கவசங்கள் பயன்படுத்தப்பட்டன. சிறு தோட்டங்களிற்கு மானியமாக 7.67 மில்லியன் ரூபாவும் பெருந்தோட்டக் கம்பனிகளின் பொருட்டு 5,480 ஹெக்டயார் பரப்பும் இலக்காக காணப்பட்டதோடு, அவற்றுள் அதிகமான அக்கறையினால் 5,702.39 ஹெக்டயார் பரப்பிற்கு மழைக்கவசத்தைப் பயன்படுத்துவதற்கு மானியமாக 27.356 மில்லியன் ரூபாவும் செலவழிக்கப்பட்டன.

## 2.3 ஊடுபயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டம்

முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர்செய்கையுடன் இறப்பர் பயிர் செய்கையாளர்கள் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக ஊடு பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 400 ஹெக்டயார் பரப்பு இலக்காக காணப்பட்டதுடன் அவற்றுள் 262.54 ஹெக்டயார் பரப்பு பயிரிடப்பட்டன. ஊடுபயிர செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்காக மானியமாக 0.963 மில்லியன் ரூபா தொகை செலவழிக்கப்பட்டன.

## 2.4 பயிற்சி நிகழ்ச்சித் திடடம்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக சாதாரண இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒட்டுச் செய்கையாளருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்பன நடாத்தப்பட்டன. இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சதாரணமாக இறப்பர் பால் வெட்டுபவர்ளுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2,400 ஆனதோடு அவர்களுள் 2,320 நபர்கள் பயிற்சியை பூர்த்தி செய்தார்கள். சாதாரண இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 1.596 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 300 ஆனதோடு அவர்களுள் 296 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்படடன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2.87 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சிக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 250 ஆனதோடு அவர்களுள் 218 நபர்களுக்கு பயிற்சிகள் வழஙகப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 0.18 மில்லியன் ரூபா செலவழிக்கப்படடன.

## 2.5 திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

1. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெற்றிடமாகிய கன்றுகளை நடுவதற்காக 100,000 இறப்பர் கன்றுகள் இலக்காக இருந்ததோடு 93,177 கன்றுகள் மொனராகலை, பதுளை, அம்பாறை, அம்பாந்தோட்டை, வவுனியா, பொலனறுவை ஆகிய மாவட்டங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. அதற்காக 5.59 மில்லியன் ரூபா தொகை செலவழிக்கப்பட்டது.
2. முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர் செய்கைக் காணியில் ஊடு பயிராக பயிரிடுவதற்கு வாழைக்கன்றுகள் மற்றும் அன்னாசிக் கன்றுகள் இலவசமாக பெற்றுக் கொடுக்கபட்டன. கன்றுகளின் இலக்கானது 67,000 ம் ஆனதோடு 27,451 வாழைக்கன்றுகளும் 46,955 அன்னாசிக் கன்றுகளுமாக மொத்தமாக 74,406 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை 1.92 மில்லியன் ரூபாவாகும்.
3. இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு 50% முானியஅடிப்படையில் பால்வெட்டும் கத்திகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிக்காக இலக்கு ொகள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2,600 ம் ஆக இருந்ததோடு பயிற்சியினை நிறைவு செய்த 2,528 நபர்களுக்கு பால்வெட்டும் கத்திகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதற்காக செலவழிக்கப்பட்ட நிதி 0.73 மில்லியன் ரூபாவாகும்.
4. இறப்பர் சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 50% நன்கொடை நிதியினை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறப்பர் முடிவுப் பொருள் உற்பத்தி சார்ந்த கைத்தொழிலாளர்கள் ஐவருக்கு வாகன உதிரிப்பாகங்களை தயாரித்தல், சப்பாத்து தயாரித்தல், இறப்பரிலான புஸ் வகைகளை தயாரித்தல், இறப்பரினை அரைத்தல் முதலான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 1.16 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டன.

## 3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - வருடம் 2012

### 3.1 இறப்பர் பயிர்செய்கை பரப்பின் அளவு

வருடாந்த இறப்பர் பயிர்செய்கை காணியின் பரப்பானது அதிகரிப்பை காட்டி நிற்கிறது. 2012ம் ஆண்டில் நாடு முழுவதும் மதிப்பிடப்பட்ட மொத்த இறப்பர்க் காணியின் அளவு 2010ம் ஆண்டில் நிலவிய இறப்பரக்காணிக் கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.

| 2012ம் ஆண்டில் இறப்பர் பயிர்செய்கை நில அளவு | | | |
|---|---|---|---|
| | தனியார் துறை (20 ஹெக்டயாருக்கும் குறைந்த நிலம்) ஹெக் | பிரதேச பெருந்தோட்டக் கம்பனி (20 ஹெக்டயாருக்கும் கூடுதலான இடம்) ஹெக் | மொத்தம் ஹெக் |
| 2010ம் ஆண்டில் இறப்பர் காணி கணக்கெடுப்பில் அறிக்கையிடப்பட்ட காணியின் அளவு | 79,395 | 46,250 | 125,645 |
| 2011ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 80,018 | 48,516 | 128,534 |
| 2012 ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 82,170 | 48610 | 130,780 |

**புள்ளிவிபர அட்டவணை i**

இறப்பர் பயிர் செய்கை இடம்பெறும் நில அளவில் 62.83% சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துண்டுகள் அடிப்படையிலும், எஞ்சியவை பெருந்தோட்டக் கம்பனித் தோட்டங்களாகவும் இருக்கின்றன. இப்பயிர் நில அளவில் முதிர்ச்சியடையாத பயிருள்ள காணியின் அளவு 26,580 ஹெக்டயராகவும், பால் வெட்டுகின்ற முதிர்ச்சியடைந்த காணியின் அளவு 104,200 ஹெக்டயராகவும் மதிப்பிடப்பட்டுள்ளதோடு, அப்பயிர் செய்கையிலிருந்து பெற்றுக் கொண்ட மொத்த உற்பத்தியின் அளவு 152,049 மெட்றிக் தொன்னாகும். 2012ம் வருடத்தில் ஒரு ஹெக்டயாரிலிருந்து பெற்றுக் கொண்ட வருடாந்த அறுவடை காய்ந்த இறப்பர் 1,459 கிலோகிராமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 3.2 உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவு

#### 3.2.1 உற்பத்தி

2012ஆம் வருடத்தின் மொத்த இறப்பர் உற்பத்தி 152,049 மெட்றிக் டொன்னாகும். இது கடந்த வருடத்தின் மொத்த உற்பத்தியான 158,198 மெட்றிக் டொன்னுடன் அளவிடும் போது ஒப்பீட்டு ரீதியில் 3.9% குறைவினைக் காட்டுகிறது. இவ்வாறு உற்பத்தி குறைவிற்கு தாக்கம் செலுத்திய முக்கிய காரணி 2011ம் வருடத்தில் இறப்பரின் விலை வீழ்ச்சியடைந்தமையேயாகும்.

**2012 ஆம் ஆண்டின் மொத்த இறப்பர் உற்பத்தி (மெட்றிக் டொன்)**

| ஆண்டு | சீட் இறப்பர் | ஸ்கிரேப் கிரேப் | சோல் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் T.S.R | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 60699 | 1332 | 3384 | 59933 | 7981 | 24869 | 158198 |
| 2012 | 59242 | 1280 | 1902 | 36550 | 8672 | 44403 | 152049 |

**புள்ளிவிபர அட்டவணை ii**

### 3.2.2 உற்பத்திச் செலவு

ஒரு கிலோ உலர்ந்த இறப்பரின் உற்பத்திக்காக 2012ம் வருடத்தில் தனியார் துறையினரின் சாதாரண உற்பத்திச் செலவு ரூபா: 136.00 ஆகும். இது கடந்த வருட உற்பத்திச் செலவாகிய ரூபா: 129.56 உடன் ஒப்பிட்டும் போது ரூபா: 4.97 அதிகரிப்பினைக் காட்டுகின்றது. உற்பத்திச் செலவானது 2002 ம் ஆண்டு தொடக்கம் அதிகரித்துச் செல்லகின்ற முறையினைக் புள்ளிவிபர அட்டவணை III காட்டுகின்றது.

**இறப்பர் உற்பத்திச் செலவு**

*( 01 கி.கிராம் 1/ ரூபா)*

| ஆண்டு | பெருந்தோட்டக் கம்பனி | தனியார் துறை |
|---|---|---|
| 2002 | 55.74 | 54.00 |
| 2003 | 59.76 | 63.30 |
| 2004 | 65.98 | 73.37 |
| 2005 | 72.56 | 77.37 |
| 2006 | 87.65 | 97.20 |
| 2007 | 102.31 | 112.69 |
| 2008 | 119.89 | 114.00 |
| 2009 | 135.83 | 118.56 |
| 2010 | 158.94 | 119.83 |
| 2011 | 188.23 | 129.56 |
| 2012 | 207.00 | 136.00 |

**புள்ளிவிபர அட்டவணை iii**

### 3.3 உள்நாட்டு இறப்பர் நுகர்வு

இந்நாட்டில் உற்பத்திச் செய்யப்பட்ட இயற்கை இறப்பர் கடந்த காலங்களில் முக்கியமாக ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதியான தொழில்நுட்ப மூலப்பொருளாக இருந்ததோடு, தற்போது இந்நிலைமை மாற்றமடைந்து உள்நாட்டு முடிவுப் பொருள் உற்பத்திக்காக அதிகமான அளவில் இறப்பரினை பயன்படுத்தும் தன்மையினை காண முடியும்.

அதற்கிணங்க 2012 ஆண்டில் இயற்கை இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 110,038 மெட்றிக் டொன்னாகும். இந்த அளவு 2012ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த இறப்பர் 152,049 மெட்றிக் டொன்னில் 72% ஆகும்.

ஒவ்வொரு உற்பத்தி வகை மற்றும் உற்பத்தி பொருளுக்கு ஏற்ப பச்சை இறப்பர் பாவனையின் சதவீதம் பின்வருமாறு

**தயாரிக்கப்பட்ட பொருளிற்கான பச்சை இறப்பர் நுகர்வின் சதவீதம்- 2012**

| தயாரிக்கப்பட்ட பொருளின் வகை | உற்பத்தி பொருளிற்கு ஏற்ப இறப்பர் பாவனையின் சதவீதம் (%) |
|---|---|
| டயர் உற்பத்தி | 37.6 |
| டயர் நிரப்புதல் | 17.0 |
| பலூன் மற்றும் கையுறை | 42.0 |
| பாதணி உதிரிப்பாககங்கள் | 0.4 |
| சமையலறை உபகரணங்கள் | 0.3 |
| மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | 0.7 |
| ஏனையவை | 2.0 |
| மொத்தம் | **100** |

**புள்ளிவிபர அட்டவணை iv**

### 3.4 ஏற்றுமதி

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் இறப்பர் ஏற்றுமதியின் புள்ளிவிபரங்கள் அட்டவணை Vல் காட்டப்பட்டுள்ளது.

2011 மற்றும் 2012 ஆம் வருடங்களில் இலங்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு

| மாதம் | கப்பலில் ஏற்றிய அளவு **(மெட்றிக் டொன்)** | |
|---|---|---|
| | 2011 ஆம் ஆண்டு | 2012 ஆம் ஆண்டு |
| ஜனவரி | 4590.7 | 4053 |
| பெப்ரவரி | 4958.6 | 4940 |
| மார்ச் | 4503.4 | 5994 |
| ஏப்ரல் | 4131.4 | 3524 |
| மே | 2381.4 | 2342 |
| ஜூன் | 2151.1 | 1731 |
| ஜூலை | 2838.3 | 1391 |
| ஆகஸ்ட் | 4524.4 | 1778 |
| செப்டம்பர் | 3438.7 | 2988 |
| ஒக்டோபர் | 3312.6 | 2637 |
| நவம்பர் | 2285.6 | 2470 |
| திசம்பர் | 3489.8 | 3529 |
| **மொத்தம்** | **42606** | **37377** |

**புள்ளிவிபர அட்டவணை V**

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் **தொகை** வகையின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**2011 மற்றும் 2012 ஆண்டில் ஏற்றுமதி செயய்ப்பட்ட இறப்பரின் தொகை வகையின் அடிப்படையில்**

| வருடம் | சீட் இறப்பர் | சோல் கிரேப் | ஸ்கிரேப் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் (T.S.R) | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 13,561 | 2,471 | - | 20,904 | 3,656 | 2,014 | 42,606 |
| 2012 | 11,235 | 1,401 | - | 17,431 | 4,669 | 2,641 | 37,377 |

**(மெட்றிக் டொன்)**

**புள்ளிவிபர அட்டவணை vi**

மொத்த ஏற்றுமதி இறப்பர் தொகையில் க.ஏ.செ (F.O.B) பெறுமதி அட்டவணை **vii** காட்டப்பட்டுள்ளது.

**மொத்த ஏற்றுமதி இறப்பரில் க.ஏ.செ பெறுமதி**
**(ரூபா மில்லியன்)**

| வருடம் | ஏற்றுமதித் தொகை மெட்றிக் டொன் | மொத்தப் பெறுமதி ரூபா மில்லியன் | கிலோ.கிராம் 01ன் பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|
| 2011 | 42606 | 22811.26 | 535.40 |
| 2012 | 37377 | 15726.00 | 421.00 |

**புள்ளிவிபர அட்டவணை vii**

இறப்பர் ஏற்றுமதியானது பிரதானமாக தனியார் துறையினால் மேற்கொள்ளப்படுகிறது. தனியார் துறையில் பதிவுசெய்யப்பட்ட 102 ஏற்றுமதியாளர்கள் இருக்கிறார்கள். அந்த ஏற்றுமதியாளர்கள் 102 பேரும் இத்திணைக்களத்தில் 2012 ஆம் வருடத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**இறப்பரினை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள 2012**

**(மெட்றிக் டொன்)**

| நாடு | கொள்வனவு செய்த தொகை | % |
|---|---|---|
| மலேசியா | 11,640 | 31 |
| பாகிஸ்த்தான் | 5,382 | 14 |
| இந்தியா | 5,792 | 16 |
| ஐக்கிய அமரிக்கா | 1,723 | 5 |
| ஜேர்மனி | 1,951 | 5 |
| ஜப்பான் | 1,413 | 4 |
| இத்தாலி | 1,267 | 3 |
| சீனா | 722 | 2 |
| தென்னாபிரிக்கா | 476 | 1 |
| ஸ்பைன் | 191 | 1 |
| ஐக்கிய இராச்சியம் | 388 | 1 |
| ஏனைய நாடுகள் | 6,432 | 17 |
| **மொத்தம்** | **37,377** | 100 |

**புள்ளிவிபர அட்டவணை viii**

### 3.5 இறப்பரின் விலை

2011 மற்றும் 2012 வருடங்களில் இறப்பரின் விலை பின்வருமாறு.

**வகைக்கு ஏற்ப சாதாரண விலை**

*(1 கிலோ ரூபா)*

| வருடம் | வருடாந்த சாதாரண விலை | | |
|---|---|---|---|
| | **சீட் இறப்பர் இலக்கம் 1** | **ஸ்கிரேப் இறப்பர் இலக்கம்.11XBR** | **லேடெக்ஸ் கிரேப் இலக்கம்: 1X** |
| 2011 | 513.05 | 461.83 | 575.65 |
| 2012 | 416.61 | 377.09 | 410.84 |

**புள்ளிவிபர அட்டவணை ix**

### 3.6 இறப்பர் துறை தொழிலாளர் சம்பளம்

நாற்று மேடையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு 2011 ம் ஆண்டு ஜுலை மாதம் தொடக்கம் சம்பள அதிகரிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்ட அடிப்படை மொத்தச் சம்பளம் வளர்ந்தோருக்கு ரூபா: 380/- ஆகும். இதற்கு மேலதிகமாக மாதமொன்றினுள் 80% வரவுகொண்ட தொழிலாளருக்கு ஒரு நாளைக்கு ரூபா: 220/- ஆன கொடுப்பனவு வழங்கப்பட்டது. சம்பள கட்டுப்பாட்டுச் சபை சிபாரிசின்படி அதிகரித்து நடைமுறைப்படுத்தப்பட்ட தேற்கூறப்பட்ட சம்பளம் மற்றும் ஊக்கக் கொடுப்பனவினால் நாற்றுமேடை ஊழியர்களின் வரவு மற்றும் செயலாற்றுகையை அதிகரிக்க முடிந்தது.

### 3.7 இறப்பர் பெருந்தோட்டப் பொருள் ஏற்றுமதி

இவ்வருடத்தினுள் இறப்பர் பெருந்தோட்டப் பொருள் ஏற்றுமதிக்காக அனுமதிபத்திரம் விநியோகிக்கப்படவில்லை

### 3.8 இறப்பர் வியாபாரிகள்

2012 ஆம் வருடத்தில் 1141 இறப்பர் வியாபாரிகளுக்கு அனுமதி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அடிப்படையில் அவ் வியாபார அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டமை பின்வருமாறு

| மாவட்டம் | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | புதிதாக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 48 | 06 |
| கம்பஹா | 08 | 0 |
| களுத்துறை | 307 | 67 |
| இரத்தினபுரி | 259 | 36 |
| கேகாலை | 362 | 46 |
| கண்டி | 09 | 0 |
| மாத்தளை | 24 | 0 |
| காலி | 76 | 06 |
| மாத்தறை | 32 | 01 |
| மொனராகலை | 16 | 04 |
| மொத்தம் | **1141** | **166** |

**புள்ளிவிபர அட்டவணை x**

### 3.9 இறப்பர் மீள் பயிரிடல் / புதிய பயிர் செய்கை மானிய முறைமை

முானியமுறைமையின் கீழ் இறப்பர் பயிர் செய்கையினை மீண்டும் அல்லது புதிதாக பயிரிடுவதற்காக 1953ம் ஆண்டின் 36ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் சட்டத்தின் 07ம் பிரிவுக்கு இணங்க அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். இச்சட்டத்தின்படி அனைத்து இறப்பர் காணிகளும் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட இறப்பர் காணியில் இருக்கின்ற பயிரானது 20 வயதினை அடைந்ததன் பின்னர் அவ்விடம் முானியமுறைமையின் கீழ் மீண்டும் பயிர் செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகமை பெறும்.

இறப்பர் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்ந்தும் ஊக்கக் கொடுப்பனவிற்காக ஹெக்டயார் ஒன்றுக்கு ரூபா: 125,000/- ஆன மீள் பயிர் செய்கை / புதிய பயிர் செய்கை மானியத் தொகை 2011ம் ஆண்டில் பினவருமாறு அதிகரிக்கப்பட்டது.

இறப்பரினை புதிதாக பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூபா: 150,000

இறப்பரினை மீள் பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூபா 175,000

இந்த நன்கொடை 08 தவனைகளில் வழங்கப்படும்

### 3.10 "மகிந்த சிந்தனையை" நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய பயிர்செய்கை உள்ளடங்கலாக இறப்பர் பயிர் செய்கையின் முன்னேற்றம்.

இந்நாட்டின் இறப்பர் கைத்தொழிலை சக்தி வாய்ந்த பொருளாதார கருத்திட்டமாக நடாத்திச் செல்வதற்காக வயதான, காலம் கடந்த மற்றும் பொருளாதார ரீதியாக உற்பத்தித் திறனற்ற இறப்பர் பயிரினை நீக்கி அவ்விடத்தில் மீண்டும் பயிர்செய்தல் வேண்டும். உற்பத்தித்திறன் வாய்ந்த பயிர்செய்கையினை நடாத்திச் செல்வதற்காக மொத்த இறப்பர் நிலக் காணியில் 3% ல் ஆவது வருடாந்தம் மீண்டும் பயிர் செய்யப்படுதல் வேண்டும். அந்நில அளவு அன்னளவாக 3900 ஹெக்டயராகும். 2012 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மீள் பயிர்/ புதிதாக பயிர் செய்யும் இறப்பர் காணியின் அளவு 6300 ஹெக்டயராகும். 2012 ஆம் ஆண்டில் மீள் பயிர் செய்வதற்காக எதிர்பார்த்த நிலத்தின் அளவு தனியார் துறையில் 1,800 ஹெக்டயராகவும் மற்றும் அரச தோட்டத் துறையில் 1500 ஹெக்டயராகவும் 3,300 ஹெக்டயராகும். வருடத்தினுள் எதிர்பார்த்த புதிய பயிர் செய்கையின் அளவு தனியார் தறையில் சம்பிரதாய பூர்வமான பிரதேசங்களில் 1750 ஹெக்டயராகவும், சம்பிரதாய பூர்வமற்ற பிரதேசங்களில் 1,250 ஹெக்டயராகவும் மொத்தமாக 3000 ஹெக்டயராகும்.

மீள் பயிர் செய்கை மற்றும் புதிய பயிர் செய்கை மாணிய உதவி முறைமையின் கீழ் பயிரிடுதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள், விநியோகித்த அனுமதி பத்திரங்கள் மற்றும் பொருத்தமான முறையில் பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு புள்ளிவிபர அட்டவணை XI மற்றும் XII குறிப்பிடப்பட்டுள்ளன.

**இறப்பர் மீள் பயிர் செய்கை முானியஉதவி முறைமையின் கீழ் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவு (சிறுதோட்ட உரிமையாளர்கள்) வருடம்-2012**

*(ஹெக்டயார்)*

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்ப பத்திரங்கள் | | வியோகிக்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் | | மீள் பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) |
| களுத்துறை | 1,049 | 614.770 | 992 | 597 | 459 | 288.670 |
| கோகாலை | 1,275 | 798.530 | 1,003 | 614.69 | 609 | 355.190 |
| கம்பஹா | 179 | 120.150 | 137 | 95.31 | 103 | 73.160 |
| குருநாகலை | 45 | 74.670 | 41 | 47.79 | 32 | 32.880 |
| கண்டி | 105 | 99.500 | 50 | 25.85 | 34 | 14.140 |
| மாத்தளை | 23 | 63.000 | 10 | 34.72 | - | 2.024 |
| இரத்தினபுரி | 625 | 445.130 | 558 | 380.55 | 275 | 198.412 |
| காலி | 66 | 69.933 | 63 | 56.402 | 34 | 32.392 |
| மாத்தறை | 68 | 49.068 | 37 | 44.437 | 28 | 32.621 |
| மொனராகலை | 04 | 2.830 | 04 | 2.83 | 04 | 2.830 |
| கொழும்பு | 240 | 160.010 | 204 | 139.312 | 124 | 84.820 |
| **மொத்தம்** | **3,679** | **2,497.591** | **3,099** | **2,038.891** | **1,702.0** | **1,117.139** |

**புள்ளிவிபர அட்டவணை xi**

**புதிய இறப்பர் பயிர் செய்கை முானியஉதவி முறைமையின் கீழ் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவு (சிறுதோட்ட உரிமையாளர்கள்) வருடம்- 2012**

*(ஹெக்டயார்)*

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்ப பத்திரங்கள் | | வியோகிக்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் | | புதிதாக பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) |
| களுத்துறை | 764 | 357.870 | 715 | 329.990 | 307 | 145.160 |
| கோகாலை | 1397 | 639.940 | 1164 | 508.380 | 667 | 279.920 |
| கம்பஹா | 230 | 126.000 | 178 | 91.980 | 125 | 66.990 |
| குருநாகலை | 137 | 93.580 | 90 | 68.350 | 46 | 38.360 |
| கண்டி | 78 | 69.960 | 46 | 24.620 | 21 | 11.270 |
| மாத்தளை | 44 | 74.150 | 24 | 34.380 | - | 11.330 |
| இரத்தினபுரி | 1012 | 646.020 | 749 | 441.180 | 393 | 254.019 |
| காலி | 364 | 209.116 | 273 | 168.889 | 79 | 61.097 |
| மாத்தறை | 362 | 189.910 | 318 | 170.026 | 191 | 92.453 |
| அமடபாந்தோட்டை | 163 | 94.766 | 156 | 88.691 | 48 | 26.102 |
| கொழும்பு | 227 | 129.590 | 182 | 78.908 | 105 | 57.822 |
| மொனராகலை | 558 | 345.640 | 329 | 204.780 | 93 | 48.510 |
| பதுளை | 248 | 153.460 | 198 | 113.110 | 58 | 39.100 |
| அம்பாறை | 755 | 435.750 | 738 | 422.500 | 241 | 137.500 |
| **மொத்தம்** | **6339** | **3565.752** | **5160** | **2745.784** | **2374** | **1269.633** |

**புள்ளிவிபர அட்டவணை xii**

**மீள் பயிரிடப்பட்ட இறப்பர்க் காணியின்அளவு 1990-2012**

**(ஹெக்டயார்)**

| வருடம் | தனியார் துறை | பெருந்தோட்டக் கம்பனி | **மொத்தம்** |
|---|---|---|---|
| 1990 | 3584 | 1617 | 5201 |
| 1991 | 3507 | 1794 | 5301 |
| 1992 | 2028 | 1889 | 3917 |
| 1993 | 2419 | 2817 | 5236 |
| 1994 | 1623 | 2138 | 3761 |
| 1995 | 1778 | 1461 | 3239 |
| 1996 | 1983 | 1217 | 3200 |
| 1997 | 1172 | 2045 | 3217 |
| 1998 | 1173 | 2542 | 3715 |
| 1999 | 665 | 3866 | 4531 |
| 2000 | 770 | 1853 | 2623 |
| 2001 | 558 | 4584 | 5142 |
| 2002 | 712 | 2066 | 2778 |
| 2003 | 565 | 494 | 1059 |
| 2004 | 819 | 1264 | 2083 |
| 2005 | 1257 | 2329 | 3586 |
| 2006 | 1122 | 2331 | 3453 |
| 2007 | 993 | 4199 | 5192 |
| 2008 | 812 | 5293 | 6105 |
| 2009 | 1002 | 5360 | 6362 |
| 2010 | 1186 | 4755 | 5941 |
| 2011 | 1123 | 1927 | 3050 |
| 2012 | 1117 | 1044 | 2161 |

**புள்ளிவிபர அட்டவணை xiii**

**புதிதாக பயிரிடப்பட்ட இறப்பர் காணியின்அளவு 1990-2012**

**(ஹெக்டயார்)**

| வருடம் | தனியார் துறை | பெருந்தோட்டக் கம்பனி | **மொத்தம்** |
|---|---|---|---|
| 1990 | 1,039 | 258 | 1,297 |
| 1991 | 1,602 | 202 | 1,804 |
| 1992 | 612 | 302 | 914 |
| 1993 | 907 | 135 | 1042 |
| 1994 | 670 | 37 | 707 |
| 1995 | 651 | 45 | 696 |
| 1996 | 1,208 | 35 | 1,243 |
| 1997 | 793 | 21 | 814 |
| 1998 | 516 | 17 | 533 |
| 1999 | 223 | 48 | 271 |
| 2000 | 243 | 34 | 277 |
| 2001 | 150 | 14 | 164 |
| 2002 | 227 | 7 | 234 |
| 2003 | 451 | 7 | 458 |
| 2004 | 518 | 5 | 523 |
| 2005 | 1,032 | 11 | 1,043 |
| 2006 | 1,603 | 297 | 1,900 |
| 2007 | 1,701 | 333 | 2,034 |
| 2008 | 2,130 | 414 | 2,544 |
| 2009 | 715 | 74 | 789 |
| 2010 | 1,317 | 96 | 1,413 |
| 2011 | 2,166 | 838 | 3,004 |
| 2012 | 2,297 | 179 | 2,476 |

**புள்ளிவிபர அட்டவணை xiv**

## 3.11 வெளிநாட்டு நன்கொடை (IFAD) மூலம் நடைமுறைப் படுத்தப்படும் மொனராகலை விசேட நிகழ்ச்சித்திட்டம்

### சிறிய பெருந்தோட்டப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மொனராகலை மாவட்டத்தில் 5000 ம் ஹெக்டயரில் பயிர் செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தில் பயிர்செய்கை நடவடிக்கைகள் இவ்வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதற்கிணங்க மொனராகலை மாவட்டத்தில் பிபிலை, படல்கும்புர, மொனராகலை, மடுல்ல மற்றும் மெதகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படத்தப்பட்டது. இவ்வருடத்தில் 1027 ஹெக்டயார் பயிரிடப்பட்டன.

### 3.12 இறப்பர் கன்று நாற்றுமேடையும் கன்று விநியோகமும்

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் இறப்பரின் விலையினால் இறப்பர் பயிர் செய்கை குறித்து பெருந்தோட்டக் காரர்களின் அக்கறை அதிகரித்தது. இதனால் இறப்பர் கன்றுகளுக்கான கேள்வி தடையின்றி உயர்ந்து சென்றது. இதனால் கன்று உற்பத்திக்கு திணைக்களத்தினால் விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

தனியார் இறப்பர்கன்று நாற்று மேடைகள் மற்றும் வர்த்தக இறப்பர்கன்று நாற்று மேடைகளை அமைப்பதற்காக திணைக்களதத்தின் அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஆரம்ப கட்டத்தில் இந்த நாற்று மேடைகளில் உயர் தரத்திலான ஒட்டுக் கிளை நாற்று மேடைகளை அமைப்பதற்காக தேவையான நடுகைப்பொருள் திணைக்களத்தின் நாற்றுமேடைகளிலிருந்து வழங்கப்படும்.

#### 3.12.1 தனியார் மற்றும் வர்த்தக நாற்றுமேடைக்கான அனுமதிப் பத்திரம் - 2012

கடந்த சில வருடங்கள் முழுவதும் இயற்கை இறப்பருக்கு நிலையான கவர்ச்சியான விலை கிடைத்தமையினால் 2012ம் ஆண்டில் இறப்பர் பயிர்செய்கை தொடர்பாக பெருந்தோட்டப் பயிர்செய்கையாளர்களின் அக்கறை மற்றும் கேள்வி உயர் நிலையில் நிலவியது. இக்கேள்விக்குத் தேவையான கன்று உற்பத்தியில் பாரிய பொறுப்பு இத்திணைக்களத்திற்கே வழங்கப்பட்டது. தனியார் தறை நாற்றுமேடைகள் கன்று உற்பத்தியின்போது பங்களிப்பினை பெற்றுக் கொடுத்தது.

உயர்தரத்து ஒட்டுமுறை இறப்பர் கன்றுகளை பயிர்செய்கையாளருக்கு பெற்றுக் கொடுப்பது திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும். திணைக்கள நாற்றுமேடைகளில் கன்று உறபத்தி பொக்கினை அதிகரித்தல் கன்றின் பண்பினை மேலும் அதிகரித்தல் மற்றும் நாற்றுமேடை உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் நோக்கில் நாற்றுமேடை அபிவிருத்தி நடவடிக்கைகளை் பல திணைகக்ளத்தினால் மேற்கொள்ளப்பட்டன. தனியார் துறை நாற்றுமேடைகள் உயர்தர கன்று உற்பத்திக்காக பயன்படத்தவது திணைக்களத்தின் பொறுப்பாகும். சிபாரிசு செய்யப்பட்ட முறைக்கமைய அமைக்கப்பட்டுள்ள நாற்று மேடைஅ தொடரபாக அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட தனியார் நாற்றுமேடை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடிக்கடி மேற்பார்வைக்கு உள்ளாவதோடு நாற்று மேடையை பரிந்துரைக்கப்ட்ட நடாத்திச் செல்வதற்கு தேவையான ஆலோசனையும் பெற்றுக கொடுக்கபபடகிறது. இக்கன்று நாற்றுமேடை பரிந்துரைகக்பட்ட முறைக்கு நடாத்தப்பட்டுச் செல்கிறதா என்ற விடயங்கள் இறப்பர் அபிவிருத்தி அலுவலரினால் மேற்கொள்ளப்படும்.

**அரச நாற்று மேடைகளின் கன்று உற்பத்தி மற்றும் கன்றுளின் விநியோகம் - 2012**

| நாற்று மேடையின் பெயர் | மாவட்டம் | கன்று உற்பத்தி |
|---|---|---|
| கரப்பிஞ்சா | இரத்தினபுரி | 102109 |
| மீரிகம | கம்பஹா | 346692 |
| வெலிகடமுல்ல | கம்பஹா | 417287 |
| ஏகல்ஓய | களுத்துறை | 306705 |
| கும்புக்கன | மொனராகலை | 413038 |
| குருகொடை | களுத்துறை | 310460 |
| மித்தெனிய | அம்பாந்தோட்டை | 105081 |
| **மொத்தம்** | | **2001372** |

**புள்ளிவிபர அட்டவணை XV**

2012ம் ஆண்டில் திணைக்கள நாற்றுமேடைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கன்றுகளின் உற்பத்தி 2.2 மில்லியன் ஆகும். வருடத்தின் கன்றுகளின் மொத்த உற்பத்தி 2 மில்லியன் ஆவதோடு வருடத்தினுள் பகிர்ந்தளிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 1.36 மில்லியன் மட்டுமேயாகும்.

**கன்று உற்பத்தி ( தனியார் நாற்றுமேடை) -2012**

| பிரதேச அலுவலக அதிகாரப்பிரிவு | பதிவு செய்யப்பட்ட நாற்றுமேடைகளின் எண்ணிக்கை | கன்று விநியோகம். |
|---|---|---|
| கேகாலை | 12 | 561774 |
| களுத்துறை | 05 | 85740 |
| மொனராகலை | 38 | 609498 |
| காலி | 20 | 44189 |
| இரத்தினபுரி | 08 | 568214 |
| **மொத்தம்** | **83** | **1869415** |

**புள்ளிவிபர அட்டவணை xvi**

திணைக்கள கன்று நாற்றுமேடைகளைப் போல தனியார் துறையின் நாற்று மேடைகளிலும் அதிகமாக RRIC 121 குளோனிலான கன்று விநியோகிக்கப்பட்டதோடு கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது RRISL 203 குளோனிலான உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டது.

### 3.13 ஊடுபயிர் வளர்ப்பு

2006ஆம் ஆண்டு தொடக்கம் இறப்பருடன் ஊடுபயிர் பயிரிடும் சிறு நில உரிமையாளர்களுக்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின்படி ஏக்கருக்கு 4000.00 ம் ரூபா மாணிய உதவி வழங்குதல் இத்திணைக்களத்தினால் இதுவரை மேற்கொள்ளப்படுகின்றது. 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் இந்த மாணிய உதவி வாழை மர வளர்ப்புக்கு மாத்திரமே வழங்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் அன்னாசிப் பயிர் வளர்ப்பிற்காகவும் மேற்கூறப்பட்ட அடிப்படையில் முானியஉதவி வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்டது. 2011ம் ஆண்டில் கொடித்தோடையானது இம்முானியமுறைக்கு உள்வாங்கப் பட்டது. 2012ம் ஆண்டில் ஊடுபயிர் வளர்ப்பு ஊடுபயிர்யமாக ரூபா: 963000 நிதி கொடுப்பனவு செயய்யப்பட்டுள்ளது.

**2012 ஆம் ஆண்டில் துணைப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலத்தின் அளவு**

| மாவட்டம் | பயிர்செய்கையின் நிலப் பரப்பு (ஹெக்டயார்) |
|---|---|
| கேகாலை | 59.330 |
